**தலைப்பு 101 – புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 06 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க

கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

#### நிதியல்லா சொத்துக்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக கணக்கீடு செய்த போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சின் புத்தசாசன பிரிவினால் 2021 மே 05 ஆந் திகதி பௌத்த அலுவல்கள் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்ட ரூபா 2,500,000 கிரயமான டபள் கெப் வண்டியின் பெறுமதி நிதியல்லா சொத்துக்களில் வாகனங்களின் பெறுமதியில் உள்ளடக்கப்பட்டமையின் காரணமாக அப்பெறுமானத்தால் நிதியல்லா சொத்துக்கள் அதிகரித்து காண்பிக்கப்பட்டதுடன் அமைச்சின் பயன்பாட்டிற்காக பெறப்பட்ட நீர் மற்றும் நீர் போக்குவரத்து அமைச்சிற்கு சொந்தமான ரூபா 6,000,000 பெறுமதியான ஜீப் வண்டி நிதியல்லா சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. மேலும் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாத 02 | பௌத்த அலுவல்கள் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்ட ரூபா 2,500,000 பெறுமதியான டபள் கெப் வண்டி மற்றும் பயன்பாட்டிற்காக அமைச்சிற்கு கையளிக்கப்பட்ட நீர் போக்குவரத்து அமைச்சிற்கு சொந்தமான கிரயம் ரூபா 6,000,000 ஆன ஜீப் வண்டியின் பெறுமதி என்பன 2022 ஆம் ஆண்டின் போது நிதியல்லா சொத்துக்களிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் மற்றைய 02 வாகனங்களினதும் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதியல்லா சொத்துக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுவனத்திற்குச் சொந்தமான சகல வாகனங்களினதும் பெறுமதி முறையான பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்ய வேண்டியிருந்த துடன் ஏனைய நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்ட வாகனங்களின் பெறுமதிகளை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வாகனங்களின் பெறுமதி நிதியல்லா சொத்துக்களில் உள்ளடக்கப்படாமையின் காரணமாக அப்பெறுமதியால் நிதியல்லா சொத்துக்கள் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) ஆண்டின் இறுதியில் அமைச்சின் கலாசார பிரிவிற்கு சொந்தமாக 50 வாகனங்கள் காணப்பட்டதுடன் 2021 இன் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட ACA(06) படிவத்தின் பிரகாரம் 19 வாகனங்களின் பெறுமதி ரூபா 71,350,000 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியல்லா சொத்துக்கள் கூற்றில் 31 வாகனங்களின் பெறுமதி உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | 03 வாகனங்கள் 2022 ஆம் ஆண்டின் போது சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 18 வாகனங்களுக்காக மதிப்பீடு கிடைத்ததன் பின்னர் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் அதில் 10 வாகனங்கள் விற்றுத் தீர்ப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளது. | நிறுவனத்திற்குச் சொந்தமான சகல வாகனங்களினதும் பெறுமதி முறையான பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பாதீட்டு மதிப்பீடு தயாரித்தல் | | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கும் போது இயலுமான வரை சரியாக தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் 13 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக 12 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையும், 04 மூலதன செலவின விடயங்களுக்காக 43 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையும் ஆன வீச்சில் ஆரம்ப மற்றும் திருத்தப்பட்ட செலவின மதிப்பீடுகளுக்கிடையே முரண்கள் | சில செலவின விடயங்களுக்காக நிதியேற்பாடு போதியளவு இல்லாமை, சில செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளில் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் செலவினங்கள் செய்யப்படாமை மற்றும் 03 மூலதன செலவினங்களுக்குரிய ஆரம்ப செலவின மதிப்பீட்டை திருத்தியமை என்பன இந்த | மதிப்பீடு தயாரிக்கும் போது இயலுமானவரை சரியாக தயாரித்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| காணப்பட்டன. | முரண்களுக்கு காரணமாக இருந்தன. | |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சகல பொறுப்புக்களும் ஏற்பட்டவுடன் பதியப்பட வேண்டியிருந்த போதிலும் கலாசார பிரிவினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அதன் காரணமாக கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் கூற்றின் பிரகாரம் பொறுப்புக்கள் சரியாக இருந்தமையை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | 2022 ஆம் ஆண்டு முதல் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றை சரியாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று சரியாக பேணிச் செல்லப்படல் வேண்டும். |

**2.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமாக ஆக்குவதற்கு தேவையான மாற்றங்களை செய்யவேண்டியிருந்தமையும், அந்த மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு | சரிசெய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் செயல் முன்னேற்றம் தொடர்பாக தொடர்ச்சியாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அது தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடல் வேண்டும். |

சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயம் | | | | |
| (i) 4.2.5, 4.5 மற்றும் 4.6 உப பிரிவுகள் | 397,087 | புத்தசாசன பிரிவில் ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தரின் ரூபா 167,055 கடன் மீதி 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்தும், கலாசார பிரிவில் ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தரின் ரூபா 128,732 கடன் மீதி 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்தும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. மேலும் கலாசார பிரிவில் மரணமடைந்த உத்தியோகத்தரிட மிருந்து ரூபா 101,300 கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | மரணமடைந்த உத்தியோகத்தர்களிட மிருந்து அறவிட வேண்டிய கடன் மீதியை விதவைகள் ஓய்வூதியத்திலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஏற்பாடுகளின் பிரகாரம் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ii) | 4.2.3 உப பிரிவு மற்றும் 2015 ஒக்தோபர் 09 ஆந் திகதிய PED/RED/2015 /08 பொது(i) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.3(உ) பந்தி | 686,867 | புத்தசாசன பிரிவில் வேலை நீக்கத்திற்கு உட்பட்ட உத்தியோகத்தரின் ரூபா 32,155 கடன் மீதி 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்தும், கலாசார பிரிவில் வேலை நீக்கம் செய்யப்பட்ட 10 உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிட வேண்டிய கூட்டுமொத்தமாக ரூபா 654,712 ஆன கடன் மீதி 03 வருடத்திலிருந்தும் அறவிட வேண்டிக் காணப்பட்டதுடன் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | புத்தசாசன பிரிவில் வேலை நீக்கத்திற்கு உட்பட்ட உத்தியோகத்தரிட மிருந்து அறவிட வேண்டிய கடன் மீதி தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக சட்டப் பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. கலாசார பிரிவில் வேலைநீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களி ல் மூன்று பேர்களின் கடனை பிணை காரர்களிடமிருந்து அறவிடுவதற்கும், இரண்டு பேர்களின் கடன் மீதி தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும், நான்கு பேர்களின் கடன் மீதியை எதிர்காலத்தில் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ஒரு உத்தியோகத்தரின் கடன் மீதி தற்போது அறவிடப்பட்டுள்ளது. | ஏற்பாடுகளின் பிரகாரம் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவை | | | | |
| (i) | வழிகாட்டி 3.2 | 49,841,036 | மதிப்பீட்டுப் பெறுமதி முறையே ரூபா 20,009,609 தொகை, ரூபா 14,665,744 மற்றும் ரூபா 15,165,683 ஆன பமுனாகொட்டுவ, மாவத்தகம மற்றும் பொல்கஹவெல கலாசார நிலையங்களை நிர்மாணிக்கும் | மாவத்தகம, பொல்கஹவெல கலாசார நிலையங்களை நிர்மாணிக்கும் ஒப்பந்தங்களுக்காக 05 நிறுவனங்களிலிருந்து கூறுவிலை கோரப்பட்ட போதிலும் கலாசார பாதுகாப்பு மற்றும் | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் போட்டியாளர் விலைகள் கோரப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | ஒப்பந்தம் போட்டியாளர் விலை கோராமல் 05 நிறுவனங்களிலிருந்து வரையறுக்கப்பட்ட கூறுவிலைகள் கோரப்பட்டு கலாசார பாதுகாப்பு மற்றும் நிர்மாண தனியார் கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது . மேலும் வரையறுக்கப்பட்ட கூறுவிலைகள் கோரப்பட்டு நிறுவனங்கள் தெரிவுசெய்தல் வெளிப்படையாக மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | நிர்மாண ஒப்பந்ததிற்காக 05 நிறுவனங்களில் இருந்து கூறுவிலைகள் கோரப்பட்டு ஆகக்குறைந்த விலை சமர்ப்பித்த கலாசார மற்றும் நிர்மாண தனியார் கம்பனிக்கு வழங்குவதற்கு அமைச்சின் பெறுகைக் குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | |
| (ii) | வழிகாட்டி 3.2.2(ஈ), 3.10.1 மற்றும் 7.8(அ) | - | மேற்கூறப்பட்ட ஒப்பந்த காரருக்கு ICTAD பதிவு காணப்பட்டதா என உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் மேற்கூறப்பட்ட 03 ஒப்பந்தங்களும் ஒரே தடவையில் கையளிக்கப்பட்ட போதிலும் அதற்குத் தேவையான பதவியணியினர் ஒப்பந்ததாரருக்கு சொந்தமாக காணப்படுகின்றதா என கவனத்தில் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பெறுகைகள் வழிகாட்டியின் 3.2 இன் பிரகாரம் வரையறுக்கப்பட்ட கூறுவிலைகள் கோரி அவற்றில் உள்ள கூறுவிலைகளின் பிரகாரம் மற்றும் பெறுகைக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | வழிகாட்டி 5.4.8(அ) | - | பொல்கஹவெல கலாசார நிலையத்தை நிர்மாணிப்பதற்குரிய செயலாற்றல் காப்புறுதி திகதி நீடித்து வழங்கப்படாமையின் காரணமாக ஒப்பந்ததாரரால் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்படாதிருந்த நட்டத்தை தீர்த்துக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | ஒப்பந்ததாரரால் செயலாற்றல் காப்புறுதி 2018 யூன் 23 வரை நீடிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (iv) | வழிகாட்டி 8.12.2 | - | பொல்கஹவெல மற்றும் பமுனாகொட்டுவ கலாசார நிலையங்களை நிர்மாணிப்பதற்குரிய வேலை பூர்த்தி சான்றிதழ் ஆலோசனையாளரிட மிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பமுனாகொட்டுவ கலாசார நிலையத்தின் நிர்மாணம் தொடர்பாக அதன் ஆலோசனை நிறுவனமான குருணாகல் மாவட்ட செயலகத்தால் 2019.12.26 ஆந் திகதி நிறுத்தி வைத்தல் பணத்தை விடுவிப்பதற்காக பரிந்துரை வழங்கப்பட்டிருந்த போதும் பொல்கஹவெல கலாசார நிலையத்தின் வேலைகள் இதுவரை பூர்த்தி செய்யப் பட்டிருக்கவில்லை. | - மேற்படி - |
| (v) | வழிகாட்டி 8.13.4 | 7,751,543 | பொல்கஹவெல மற்றும் பமுனாகொட்டுவ கலாசார நிலையங்களின் நிர்மாணங்களுக்குரிய முறையே ரூபா 2,195,881 மற்றும் ரூபா 5,555,662 தொகையான மேலதிக வேலைகள் அமைச்சின் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. | பொல்கஹவெல கலாசார நிலையத்தில் டைல் பதிக்கும் பணிகள் பிரதான பணிகளுக்கு மேலதிகமாக மேற்கொள்ளப்பட்ட புதிய பணியாக இருந்தமையால் இதுவரை நிர்மாணங்களை மேற்கொண்ட கம்பனிக்கு வழங்குவதற்கு பெறுகைக்குழு தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப் பட்டிருந்தது. பமுனாகொட்டுவ கலாசார நிலையத்திற்கு அருகில் மண் நிரப்புதல் மற்றும் தடுப்பு சுவரை நிர்மாணிப்பதற்கு கூறுவிலை கோரப்பட்ட போதிலும் அந்த பணிகள் உரிய கம்பனிக்கு வழங்கப்பட்டிருக்க வில்லை. அதற்கான | - மேற்படி - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டுக் கிரயம் அதிகமாக இருந்தமையால் படிக் கட்டுக்களை அமைத்து சிறிய பகுதிக்காக மாத்திரம் மண் நிரப்புவதற்கு உத்தேசிக்கப் பட்டிருந்தது. அதற்காக மாவட்ட செயலாளருக்கு 2020.01.21 ஆந் திகதி நிதியேற்பாடு விடுவிக்கப்பட்டிருந்தது. | |
| (vi) | வழிகாட்டி 8.14 | 84,843 | மாவத்தகம கலாசார நிலையத்தை நிர்மாணிப்பதற்குரிய ஒப்பந்தத்தின் காலத்தை நீடிப்பதற்கு ஒப்பந்ததாரர் கோரியிருந்த போதிலும் நீடிப்பு வழங்கப்படாதிருந்ததுடன் அதற்குரியதாக செலுத்தப்பட்ட ரூபா 8,484,290 கொடுப்பனவில் 1 சதவீத தாமதக் கட்டணம் அறவிடப் பட்டிருக்கவில்லை. | மாவத்தகம கலாசார நிலையத்தின் ஒப்பந்தக் காலம் 2017.07.30 வரை நீடித்துக் கொள்வதற்குரிய அங்கீகாரம் 2016.06.13 ஆந் திகதி செயலாளரால் வழங்கப்பட்டிருந்தது. | - மேற்படி - |
| (இ) | 2019 யூன் 27 ஆந் திகதிய 2019/05 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | | | | |
| (i) | 03(உ) பந்தி | 479,268 | கலாசார பிரிவில் சேவையை விட்டுச் சென்ற 05 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கூட்டுமொத்தம் ரூபா 479,268 ஆன கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தக் 05 கடன் மீதிகளில் ஒரு கடன் மீதி தீர்க்கப்பட்டுள்ளது. மேலும் ஒருவரால் ரூபா 40,000 செலுத்தப்பட்டுள்ளதுடன் மிகுதி கடன் மீதியை தீர்த்து வைக்குமாறு கடன்காரர்கள் மற்றும் பிணையாளர்களுக்கு தொடர்ச்சியாக கடிதம் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | அனுப்பப்படுகின்றது. கடனை அறவிடும் செயல்முன்னேற்றத்தைத பரீட்சிப்பதற்காக மாதாந்தம் கூட்டம் நடாத்தப்படுகின்றது. | |
| (ii) | 03, 04 மற்றும் 05 ஆம் பந்திகள் | 1,426,148 | கலாசார பிரிவில் முற்பணம் "பீ" கணக்கின் தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பில் பல வருட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற ரூபா 1,426,148 ஆன மீதி சீராக்கப்பட்டுள்ளதுடன் அந்த மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உள்நாட்டு அலுவல்கள், வயம்ப அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் முற்பணக் கணக்கில் இனங்காணப்படாத ரூபா 1,426,148 மீதி 2010 ஆம் ஆண்டில் தேசிய மரபுரிமைகள் அமைச்சு தாபிக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது காணப்பட்ட தேசிய மரபுரிமைகள் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் தலைப்பு இலக்கம் 142 இன் கீழ் குறிப்பிடப்பட்ட முன்னைய ஆண்டுகளின் வேறுபாடுகளாக இருந்ததுடன் அது தொடர்பான தகவல்கள் மற்றும் தரவுகள் காணப்படாமையின் காரணமாக புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (ஈ) | 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை | 811,250 | (i) 1952 இன் பொதுமக்கள் செயற்திறன் கட்டுப்பாட்டு சபை கட்டளைச் சட்டத்தின் கீழ் அனுமதிப் பத்திரம் விநியோகிப்பதற்காக திரைப்படம், DVD மற்றும் குறும்படங்களின் | பொதுமக்கள் செயற்திறன் கட்டுப்பாட்டு சபை சபையின் அங்கத்தவர்களுக்கு திரைப்பட முன்னோட்டங்களின் காட்சிகளை அரங்கேற்றுவதற்காக செயலாளரால் 2007.01.02 ஆந் திகதி ரூபா 500 கொடுப்பனவும், 2008.08.08 ஆந் திகதி ரூபா 1,000 | படிகளை செலுத்தும் போது சுற்றறிக்கையின் பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆய்விற்காக 2021 ஆம் ஆண்டின் போது சபையின் 15 அங்கத்தவர்களுக்கு திறைசேரி அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் ரூபா 811,250 படியாக செலுத்தப் பட்டிருந்தது. | வரை அதிகரித்தும் அங்கீகரிக்கப் பட்டிருந்தது. படிகள் செலுத்துவதற்காக திறைசேரி அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் மாத்திரம் எதிர்காலத்தில் கொடுப்பனவு செய்யப்படும். | |
| 103,500 | (ii) | கட்டளைச் சட்டத்தின் 5(1) மற்றும் 6(1) பிரிவுகளின் பிரகாரம் சான்றிதழ் பத்திரம் விநியோகித்தலை உறுதிப்படுத்துகின்ற அதிகாரத் தரப்பினராக சபையின் தலைவர் நடவடிக்கை எடுப்பதுடன் தலைவரின் மாதாந்த படியாக ரூபா 75,000 செலுத்தப்படுகின்றது. அதன் பிரகாரம் தலைவரின் பொதுவான கடமையின் ஒரு பகுதியாக வரும் திரைப்படம், நாடகங்கள் மற்றும் DVD அரங்கேற்றல்/ ஆய்விற்காக 2021 ஆம் | 2005 ஆம் ஆண்டிலிருந்து தலைவருக்காக திரைப்படங்களை அரங்கேற்றல், டீ.வீ.டீ இறுவெட்டுக்கள் மற்றும் நாடகங்களினை பிரதி செய்வதற்காகவும் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் சரியான அங்கீகாரமின்றி செலுத்தாதிருப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | உத்தியோகத்தர்களுக்கு முறையாக கையளிக்கப்பட்ட கடமைகளுக்காக மேலதிக படிகளை செலுத்துவதற்காக திறைசேரி அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | ஆண்டின் போது ரூபா 103,500 தொகை தலைவருக்கு செலுத்தப் பட்டிருந்தது. | | |
| (உ) | 2017 ஏப்ரல் 19 ஆந் திகதிய 2017/03 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | - | கலாசார நிலையங்களின் வருகை வெளிச் செல்லலை உறுதிப்படுத்துவதற்காக கைவிரல் அடையாள இயந்திரம் அறிமுகப் படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆகக்குறைந்த ஊழியர் பதவியணியினர் எண்ணிக்கை இருக்கின்றமையால் ஒவ்வொரு நிலையங்களுக்கும் கைவிரல் அடையாள இயந்திரத்தை ஈடுபடுத்தும் போது ஏற்படுகின்ற கிரயங்கள் அதிகமாக இருந்தமையால் கைவிரல் அடையாள இயந்திரம் ஸ்தாபிப்பதற்கு முடியாதிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் ஊழியர்களின் வருகைகளை உறுதிப்படுத்து வதன் மூலம் விடுமுறை மற்றும் மாதாந்த சம்பளம் செலுத்துதல் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

முறையான அங்கீகாரமின்றி பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 1644(11) இன் பிரகாரம் மோட்டார் வாகனமொன்று தனிப்பட்ட வேலைத்தளத்தில் பழுதுபார்க்கும் போது ஒவ்வொரு வேலைக்காகவும் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 839,370 செலவில் 07 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட பழுதுபார்த்தல்களின் போது அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களை பழுதுபார்ப்பதற்காக அனுப்பப்படுகின்ற மேவுகைக் கடிதத்தில் இந்த தகவல்கள் உள்ளடக்கும் வகையில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.6 வைப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் கீழான ஒப்பந்தங்களுக்கான மொத்த நிறுத்தி வைத்தல் பணத்தின் மீதி ரூபா 99,596,333 ஆக இருந்ததுடன் அதிலிருந்த புத்தசாசன பிரிவிற்குரிய நிறுத்தி வைத்தல் பண மீதி ரூபா 57,343,077 ஆகும். மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் 02 வருடங்களை விஞ்சிய ரூபா 1,789,359 தொகையான 02 வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் காலாவதியான வைப்பாக கருதி பெறுவனவாக சந்தர்ப்பமளிக்கப்படாமல் சந்தர்ப்ப சூழ்நிலைகளின் பிரகாரம் உரிய கணக்கிற்கு அல்லது அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைக்க வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 எதிர்பார்த்த நலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **வித்தியாலங்கார சர்வதேச பௌத்த மாநாட்டு மண்டப நிர்மாணம்** | | |
| (i) ரூபா 1,350 மில்லியன் (கட்டம் 1 - 5 வரை) ஆரம்ப மதிப்பீட்டின் அடிப்படையில் 2005 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2017 செப்தெம்பர் 30 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த | I முதல் V கட்டம் வரை நிர்மாணங்களில் இனங்காணப்பட்ட குறைபாடுகளை சரிசெய்யுமாறு மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | உரிய நிர்மாணங்கள் திட்டமிடப்பட்ட பிரகாரம் பூர்த்தி செய்து பயன்பாட்டிற்கு எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வித்தியாலங்கார சர்வதேச பௌத்த மாநாட்டு மண்டபத்தின் கட்டம் 5 வரையான நிர்மாண நடவடிக்கைகளுக்காக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,245.18 மில்லியன் கிரயமொன்று செலவிடப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டில் பாதுகாப்பு சேவை மற்றும் மின்சாரப் பட்டியல் தீர்ப்பதற்காக ரூபா 2.72 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. நிர்மாணங்களை பூர்த்தி செய்து வித்தியாலங்கார நம்பிக்கை பொறுப்பிற்கு கையளித்ததன் பின்னர் கட்டிடம் வாடகைக்கு வழங்குவதால் கிடைக்கின்ற வருமானத்தில் இந்த செயற்திட்டத்தின் vi ஆவது கட்ட நிர்மாணமாக இணங்கப்பட்டிருந்த பிரிவெனா அதிபதி தேரரர் அவர்களினால் அறிவிக்கப்பட்டிருந்த போதும் இதுவரை கட்டிடம் வித்தியாலங்கார நம்பிக்கை பொறுப்பிற்கு கையளிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பரீட்சிப்பின் போது இனங்காணப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்குரிய விசேட நிபுணத்துவ சேவையினை பெற்றுக்கொள்வதற்காக மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் சிவில் பொறியியல் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | |
| (ii) | அதன் பிரகாரம் கட்டிடத்தின் v ஆவது கட்டத்தின் செயற்பாடுகள் 2019 மார்ச் 15 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் vi ஆம் கட்டத்தின் நடவடிக்கைகள் தாமதமடைந்ததன் காரணமாக மின்சாரம் மற்றும் பாதுகாப்புச் செலவினங்களைச் செய்தல் பயனற்றதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 2019 ஆம் ஆண்டின் முரண்களுக்கு உரியதாக செலவிடப்பட்ட மின்சாரம் மற்றும் பாதுகாப்புச் செலவினங்கள் அமைச்சின் மூலம் செய்ய வேண்டிய செலவினங்கள் ஆகும். | திட்டமிடப்பட்ட பிரகாரம் பயன்பாட்டிற்கு எடுத்தல் வேண்டும். |

## 3.2 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கலாசார அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களின் நிர்மாணம் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை செயற்திறனாக நிறைவேற்றும் நோக்கில் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அமைச்சிற்கு முழுமையான பங்கு உரித்தாகவுள்ள கலாசார பாதுகாப்பு மற்றும் நிர்மாண (தனியார்) கம்பனி 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2008 நவம்பர் 17 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 154(1) பிரிவின் பிரகாரம் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள அதன் சொந்த பங்குகளின் 50 சதவீதம் அல்லது மேற்பட்ட சதவீதம் அரசாங்கம் அல்லது அரச கம்பனியினால் ஏற்படுத்தப்பட்ட கம்பனி கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்விற்கு உட்படுத்த வேண்டிய போதிலும் அமைச்சின் முழுமையான உரித்துடைய இந்தக் கம்பனி 2018/1019, 2019/2020 மற்றும் 2020/2021 என்ற நிதியாண்டுகளுக்குரிய நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | அமைச்சின் விடயப் பரப்பு அவ்வவ்போது திருத்தப்பட்டிருந்த போது கலாசார பாதுகாப்பு நிர்மாண தனியார் கம்பனியின் கோவைகளும் பல்வேறு பிரிவுகளுக்கு மாற்றப்பட்டமையின் காரணமாக தேவையான கோவைகளை கண்டறிவது வசதியீனமாக இருந்தது. | அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | உரிய கம்பனி அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டிருக்குமாயின் அதன் கீழ் உள்ள நிறுவனங்களின் நிர்மாணங்கள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் வெளி நிறுவனங்களை வரவழைத்து நிறைவேற்றும் போது ஏற்படுகின்ற | - மேற்படி - | அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் நிர்மாணங்கள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் கம்பனியை வரவழைத்து வசதியான முறையில் |

| | | | |
|---|---|---|---|
| | வசதியீனங்கள் மற்றும் பிரச்சினைகளை மாற்றியமைக்கும் வகையிலாக இருந்த போதிலும் கம்பனியினால் 2009 மற்றும் 2010 காலப்பகுதியில் கையேற்கப்பட்டிருந்த அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் நிர்மாணங்கள், 5 சதவீத அளவிலான பங்கினை வைத்துக் கொண்டு உப ஒப்பந்ததாரர்களுக்கு கையளித்து நிறைவேற்றுவதன் மூலம் அந்த வசதியீனங்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்ந்தும் ஏற்பட்டிருந்தது. | | நிறைவேற்றுதல் வேண்டும். |
| (இ) | தற்போது கம்பனியின் செயற்பாடுகள் முழுமையாக செயலிழந்தமையால் கம்பனியை கலைப்பதற்கு 2021 யூலை 05 ஆந் திகதி பிரதமரின் செயலாளரால் கோரப்பட்டிருந்த போதிலும் கலைக்கும் செயற்பாடுகள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை | கம்பனியின் செயற்பாடுகளை கலைப்பதற்காக அமைச்சரவை குறிப்பொன்று சமர்ப்பிக்கப்பட்ட போதும் அந்த நடவடிக்கைகளை இதுவரை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | செயழிலந்து காணப்படுகின்ற கம்பனி தொடர்பாக சட்டரீதியான ஏற்பாடுகள் பின்பற்றப்படல் வேண்டும். |

## 3.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலைபேறான புண்ணியகரும நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துகின்ற களுத்துறை மாவட்டத்தின் விகாரைகள் மற்றும் 04 அறநெறி பாடசாலைகளுக்காக நூலக வசதிகளை வழங்குவதற்காக ரூபா 530,000 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் | மேல் மாகாண சபையின் கைத்தொழில் திணைக்களத்திலிருந்து கட்டளை இடப்பட்டிருந்த போதிலும் இதுவரையும் அந்த உபகரணங்கள் கிடைக்காதிருந்ததுடன் கூடிய விரைவில் அலுவலகங்களுக்கு கையளிக்கப்படுமென கைத்தொழில் திணைக்களத்தால் | நிகழ்ச்சித் திட்டத்தை குறித்துரைத்த காலத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அந்த நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டு 05 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உரிய உபகரணங்கள் அறநெறிப் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | மாவத்தகம, பமுனாகொட்டுவ மற்றும் பொல்கஹவெல போன்ற கலாசார நிலையங்களின் நிர்மாணங்களுக்குரிய ஒப்பந்தம் முறையே ரூபா 14,665,744 இற்கும், ரூபா 19,999,732 தொகைக்கும் மற்றும் ரூபா 11,086,971 தொகைக்கும் 2016 ஆம் ஆண்டில் கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. உரிய நிர்மாணங்கள் முறையே 2016 திசெம்பர் 25, 2016 திசெம்பர் 23 மற்றும் 2017 சனவரி 03 என்ற திகதிகளில் பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும் 2021 திசெம்பர் வரையும் உரிய நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு கட்டிடம் கையளிக்கப்பட்டிருக்க வில்லை. | தற்போது பமுனாகொட்டுவ கலாசார நிலையத்தில் மாத்திரம் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் பொல்கஹவெல மற்றும் மாவத்தகம கலாசார நிலையங்களின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய நிர்மாணங்கள் திட்டமிடப்பட்ட பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்கப்படல் வேண்டும். |

## 3.4 நிதி விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயல்முன்னேற்றத்தை பெறாதிருந்த செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 21,383,325 கிரயமொன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்த உஹன கலாசார நிலையத்தை நிர்மாணிக்கும் பணிகளுக்காக 2015 ஆம் ஆண்டு முதல் 2021 வரை அவ்வவ்போது ரூபா 40,047,970 நிதியேற்பாடு அம்பாறை மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் நிர்மாணங்களின் செயல்முன்னேற்றம் தொடர்பான | செயல்முன்னேற்றத்தை பரீட்சித்து நிர்மாண நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கு நிதியேற்பாடு விடுவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. | கலாசார நிலையங்களின் நிர்மாண செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்படாதிருந்த துடன் நிர்மாணங்களை திட்டமிட்ட பிரகாரம் பூர்த்தி செய்து பயன்பாட்டிற்கு |

| | | |
|---|---|---|
| பின்தொடர் நடவடிக்கைகள் அமைச்சினால் மேற்கொள்ளப் படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | எடுத்தல் வேண்டும். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கலாசார பிரிவிற்குச் சொந்தமான 16 வாகனங்கள் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த மாற்றுதல்கள் மற்றும் கையளித்தல்கள் தொடர்பாக 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் 01/2020 ஆம் இலக்கத்தின் II பகுதியின் 8.1 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மூன்று ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த 07 வாகனங்கள் முறையான பிரகாரம் மோட்டார் வாகன போக்குவரத்து படிவம் எம்.ரீ. 6 இன் 8 ஆவணத்தின் மூலம் கையளிக்கப்பட்டு கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு பிரதியுடன் அறிவிப்பதற்கும் மற்றும் சொத்துக்கள் பதிவேட்டை நாளதுவரையாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மேலும் 03 வாகனங்கள் கடமை தேவையின் அடிப்படையில் தற்காலிகமாக விடுவிக்கப்பட்டுள்ளமையால் கையளித்தல் மேற்கொள்ளப்படவில்லை. | விடுவிக்கப்பட்டுள்ள வாகனங்களை சட்டரீதியாக கையளிப்பதற்கும், சொத்துக்கள் பதிவேட்டை நாதுவரையாக்கு வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) கலாசார பிரிவிற்குச் சொந்தமான விற்றுத் தீர்க்கப்பட வேண்டியதாக காணப்பட்ட 06 வாகனங்கள் தொடர்பாக 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் I பகுதியின் 13.2(ஆ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இரண்டு வாகனங்களை தொழில்பயிற்சி நிறுவனத்திற்கு விடுவிப்பதற்கும், மூன்று முச்சக்கர வண்டிகள் உடைந்த பொருட்களாக விற்பனை செய்வதற்கும் ஒரு முச்சக்கர வண்டியை விற்றுத் தீர்ப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | பழுதுபார்த்தல் பொருளாதார ரீதியில் நலனாக இல்லாத வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்காக அனுப்பப்படல் வேண்டும். |

**3.6 முகாமைத்துவ நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) ரூபா 312.49 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திச் செல்லப்படுகின்ற கட்டிடத்தில் 33547 சதுர அடி பரப்பளவான இடவசதியொன்று பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்ட போதிலும் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம் மற்றும் இந்துமத மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் முறையே ரூபா 4,200,000 மற்றும் ரூபா 6,816,000 வாடகையில் வருடாந்த வாடகை அடிப்படையில் தனியார் கட்டிடங்களில் நடாத்திச் செல்லப்படுகின்றது. இது தொடர்பாக 2020 கணக்காய்வு அறிக்கையிலும் குறிப்பிட்ட போதும் அது தொடர்பாக கவனம் செலுத்தப்படாதிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. | கட்டிடத்தின் கூரைகளில் மிகுதி வேலைகளை பூர்த்தி செய்வதற்கும், உள்ளக ரீதியில் பகுதிகளாக பிரிப்பதற்கும் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் அந்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் புத்தசாசன அமைச்சு, பௌத்த அலுவல்கள் திணைக்களம் மற்றும் வாடகை அடிப்படையில் இருக்கின்ற நிறுவனங்கள் எனபவற்றை அந்தக் கட்டிடத்தில் ஸ்தாபிப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | விளைவற்றுக் காணப்படுகின்ற சொத்துக்களை ஆகக்கூடிய முறையில் பயன்படுத்துதல் வேண்டும். |

(ஆ) நாகதீப விகாரையில் அபிவிருத்தி நடவடிக்கைகள்

அரச வெசக் விழாவினை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த யாழ்ப்பாண மாவட்டத்தின் விகாரைகளுக்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட மீளமைப்பிற்காக நாகதீப விகாரைக்கு ரூபா 12,736,743 தொகை செலவிடப்பட்டிருந்தது.

அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | |
| --- | --- | --- |
| (i) விகாரை கட்டிடத்தில் வெடிப்புக்கள் ஏற்பட்டிருந்த இடத்தை பொருத்தமான பிரகாரம் மீளமைப்புச் செய்து நீர் கசிவினை தடுக்கும் 3 வர்ணங்கள் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | திட்டமிடப்பட்ட பிரகாரம் உரிய மீளமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பூசுவதற்கு ரூபா 4,500,888 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2022 பெப்ரவரி 19 வரையிலும் நீர்க்கசிவுகள் ஏற்பட்ட நிலையில் காணப்பட்டது. | | |
| (ii) | வெளிநாட்டு பக்தர்கள் மற்றும் உள்நாட்டு பக்தர்கள்களுக்காக மலசலகூட முறைமையை நிர்மாணிப்பதற்காக முறையே ரூபா 1,834,946 மற்றும் ரூபா 941,912 செலவிடப்பட்டிருந்த போதிலும் நிர்மாணிக்கப்பட்டிருந்த கூரையில் நீர்க்கசிவு காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | - மேற்படி - |
| (iii) | கொவிட் ஒழிப்பு வழிகாட்டியின் பிரகாரம் அரச வெசக் விழா இரத்துச் செய்திருந்த போதிலும் விகாரைக்கு உள்வருகின்ற இடத்தில் வெசக் விழாவிற்காக தற்காலிகமாக தோரணம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக செலுத்தப்பட்ட ரூபா 475,000 தொகையை கடற்படையிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | இரத்துச் செய்யப்பட்ட செயற்திட்டத்திற்குரிய நிதியேற்பாட்டை மீண்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | அரச வெசக் விழாவிற்காக தயாரிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட மேடைக்காக தேவையான துணிகளை மேவுகை செய்வதற்காக (canopy) ரூபா 1.02 மில்லியன் தொகை கடற்படைக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. கொரோனா தொற்றுநோய் நிலைமையின் காரணமாக வெசக் விழா இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும் உரிய பணத்தை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (v) | மேற்குறிப்பிடப்பட்ட அபிவிருத்தி பணிகளின் செயல்முன்னேற்றத்தை மாதாந்தம் அறிக்கையிடுமாறு கடற்படைத்தளபதிக்கு அறிவிக்கப்பட்ட போதும் செயல்முன்னேற்றம் மீளாய்வு செயற்பட்டமைக்கோ அல்லது செயல்முன்னேற்ற அறிக்கை பெறப்பட்டமைக்கான சான்றுகளோ கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | செயற்திட்டம் தொடர்பான செயல் முன்னேற்றம் மாதாந்தம் பெறப்படல் வேண்டும். |
| (இ) | வாகனங்களை பழுதுபார்க்கும் போது கேள்வி கோரல் தொடர்பாக பொதுவான கட்டளைகள் உரித்தாக்கப்பட வேண்டியிருநந்த போதிலும் நிதிப்பிரமாணம் 1644(IV) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் 2017 நவம்பர் மாதத்தின் போது மோட்டார் வாகனமொன்றை பழுதுபார்ப்பற்கு நேரடியாக தனியார் கம்பனியொன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. உரிய கம்பனியால் வாகனத்தை பரீட்சித்தல் மற்றும் நிறுத்தி வைத்தல் கட்டணமாக தினமொன்றுக்கு ரூபா 500 வீதம் செலுத்துமாறு 2020 ஆம் ஆண்டின் போது அறிவித்திருந்த போதிலும் அது தொடர்பாக கவனம் செலுத்தாமையால் உரிய வாகனத்தை விரைவாகவும் மற்றும் குறைந்த கிரயத்துடனும் பழுதுபார்த்துக் கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் உரிய கம்பனியின் மூலம் ரூபா 1,258,981 செலவில் பழுதுபார்த்தலை மேற்கொள்ள வேண்டியேற்பட்டிருந்தது. | 2017 ஆம் ஆண்டில் வாகனங்களை பழுதுபார்ப்பதற்காக அனுப்பப்பட்டிருந்ததுடன் பழுதுபார்க்கப்பட்டு அமைச்சின் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. | நிறுவனத்திற்கு பொருளாதார ரீதியில் நட்டம் ஏற்படாத வகையில் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் மற்றும் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | அரச சேவைகளுக்கிடையிலான வடிவமைப்பு போட்டி - 2020 தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| (i) | செலசினே தொலைக்காட்சி நிறுவனத்திற்கு ரூபா 328,800 தொகை (VAT உடன்) செலுத்தி மேற்கூறப்பட்ட போட்டியின் வெற்றியின் வடிவமைத்தலை உள்ளடக்கி ‘‘பிரபாஸ்வர’’ என்ற பெயரில் நூலொன்றின் 300 பிரதிகள் அச்சிடப்பட்டிருந்த போதிலும் உரிய நூல்கள் அமைச்சிற்கு விழா நடைபெற்று 04 மாதங்களுக்கு பின்னர் கையளிக்கப்பட்டிருந்த மையால் நூல்கள் 2021 மார்ச் 18 ஆந் திகதி நடைபெற்ற விருது கையளித்தல் விழாவின் போது பகிர்ந்தளிப்பதற்கு முடியாதிருந்தது. | இந்த விழா மிக குறுகிய காலத்தில் திட்டமிடப்பட்டமையால் செலசினே தொலைக்காட்சி நிறுவனத்திலிருந்து நேரடிக் கொள்வனவு முறைமையினை பின்பற்றி 300 பிரதிகளை அச்சிட்டு விழாத் தினத்தின் போது கொள்வனவு செய்யப்பட்ட போதும் 17 பிரதிகள் அச்சிடல் பிழையினால் மீண்டும் உரிய நிறுவனத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. அத்திகதியில் வெற்றியீட்டிய 122 பேர்களுக்கும் பரிசுகளுடன் வெற்றியீட்டல் பிரதியும் கையளிக்கப்பட்டிருந்தது. கொடுப்பனவுகள் மேற்கொள்கின்ற சந்தர்ப்பத்தின் போது களஞ்சிய புத்தகத்தில் உள்ளடக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டமையால் வேறொரு நாளில் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. சரியான செயல்முறைகளை பின்பற்றுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. தற்போது 2020 இல் வெற்றியீட்டிய 06 நூல்கள் மேம்படுத்தல் பிரிவில் உள்ளது. | வடிவமைத்தல் போட்டியை சரியான பிரகாரம் திட்டமிட்டு அமுல்படுத்துதல் வேண்டும். |
| (ii) | இந்த நூல்களில் 300 பிரதிகளில் 200 பிரதிகள் அமைச்சின் மேம்படுத்தல் பிரிவில் 2022 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் காணப்பட்டது. | 2019 இல் வெற்றியீட்டிய பிரபாஸ்வர நூல்கள் 99 உம் தற்போது வரையில் மேம்படுத்தல் பிரிவில் உள்ளதுடன் மேற்கூறப்பட்ட 2020 இன் 96 நூல்களுடன் மொத்தமாக 195 நூல்கள் கலாசார நிலையங்களின் புத்தகக் கொள்வனவுகளின் கீழ் நூலகங்களுக்கு | திட்டமிடப்பட்ட பிரகாரம் பகிர்ந்தளித்தல் வேண்டும். |

பகிர்ந்தளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**4. நல்லாளுகை**

**உள்ளகக் கணக்காய்வு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(ஊ) பிரிவின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வின் இலக்கை உரிய பிரகாரம் அமுல்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான திட்ட முறைமையொன்று உள்ளமையை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டும். நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரமும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் நிதிப்பிரமாணம் 128 இல் காண்பிக்கப்பட்டுள்ள தமது கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக தமது திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வு அலகு தாபிக்கப்பட வேண்டும். | கலாசார பிரிவில் காணப்படுகின்ற உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடத்திற்காக பதிற்கடமை அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அவரால் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரதியொன்றை கணக்காய்விற்கு வழங்குவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் இலக்கம் 38(ஊ) பிரிவின் பிரகாரம் உள்ளக கணக்காய்வாளரை உள்ளடக்கிய அலகொன்று தாபிக்கப்படல் வேண்டும். |
| எனினும், அமைச்சின் கலாசார பிரிவிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளகக் கணக்காய்வாளர் பதவியொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் சில வருட காலமாக உரிய பதவி வெற்றிடமாக காணப்பட்டது. அமைச்சின் கலாசார பிரிவிற்காக ஆயிரத்திற்கும் அண்ணளவான பதவியணியினர் மற்றும் நாடு முழுவதும் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 194 கலாசார நிலையங்கள் செயற்படுகின்ற போதிலும் கலாசார பிரிவிற்காக 2021 ஆம் ஆண்டில் உள்ளக கணக்காய்வு திட்டமொன்று தயாரித்து போதியளவான பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் இலக்கம் 38(ஊ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 5. மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் புத்தசாசன பிரிவிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 219 ஆகவும், உள்ளபடியான பதவியணியினர் 169 ஆகவும் இருந்ததுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடங்களின் எண்ணிக்கை 50 ஆகும். அதனிடையே 03 உதவி செயலாளர் பதவிகள், 15 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள், 11 அபிவிருத்தி உதவியாளர் பதவிகள் மற்றும் 08 முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர் பதவிகளில் வெற்றிடங்கள் பல வருட காலம் முதல் காணப்படுவதுடன் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அலுவலக உதவியாளர் பதவியொன்று மிகையாக காணப்பட்டது. | உதவி செயலாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்காக கோரப்பட்டுள்ளதுடன் இதுவரையும் அதற்காக உத்தியோகத்தர்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. அபிவிருத்தி உதவியாளர் பதவி 1.1 இல் இருக்கின்ற உத்தியோகத்தர்களுக்கு தனிப்பட்ட வகையில் காணப்படுகின்ற பதவிகளின் வெற்றிடங்களை நிரப்ப முடியாதிருந்ததுடன் அதற்கு பதிலாக அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் பதவிகளை அங்கீகரித்து தருமாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | சேவைத் தேவையினை கவனத்தில் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட பிரகாரம் பதவியணியினரை சேர்த்தல் வேண்டும். |
| (ஆ) | அமைச்சிற்குச் சொந்தமாக 194 கலாசார நிலையங்கள் காணப்பட்ட போதிலும் 306 நிலைய காவலாளிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 10 ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் தனிப்பட்ட வகையில் 114 காவலாளிகள் அங்கீகரித்தமையின் காரணமாக இந்த மிகை அறிக்கையிடப்பட்டிருந்தது. கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பின் பிரகாரம் இந்த மிகையான 105 காவலாளிகளின் | நிலையத்தில் காவலாளிகள் இருவர் இருக்கின்ற நிலையங்களில் அலுவலக உதவியாளர் பதவி வெற்றிடங்கள் அந்த காவலாளிகளால் பூர்த்தி செய்யப்படுகின்றது. அலுவலக உதவியாளர் பதவி நிரப்பப்பட்டுள்ள நிலையங்களில் காவலாளிகள் இருவர் இருப்பார்களாயின் பகல் இரவு அந்த காவலாளிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | சேர்க்கப்பட்ட பதவிகளுக்கு உரிய பணிகளில் செயற்திறனாக ஈடுபடுத்துதல் வேண்டும். |

சேவையை செயற்திறனான முறையில் பெற்றுக் கொள்வதற்கும் அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.